2023 ஏப்ரல் 11]

(வடக்கு) தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்போதுகூட திருப்பூர் மாநகராட்சி மிகச் சிறப்பாக இருக்கிறது என்று ஒன்றிய அரசே இரண்டு முறை பரிசுகள் வழங்கியிருக்கின்றது என்று சொல்கிறார்கள். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் கொள்கிறோம். இன்று மாலை துறையின் சார்பில் திருப்பூர் மாநகராட்சியினுடைய ஆணையர் அவர்களுடனான கூட்டம் இருக்கிறது. நீங்கள் சொன்னதைக் கவனத்தில் கொண்டு, அதை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியும் என்பதை ஆராய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

132—

சிப்காட் தொழிற்பேட்டை

***14467—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி என்பது டெல்டா மாவட்டத்தினுடைய கடைமடை பகுதியாகும். கடைமடை பகுதி என்று சொன்னால், சில பேருக்குத் தெரியாது. மேட்டூரிலிருந்து பாசனத்திற்காகத் திறக்கப்படுகின்ற தண்ணீர் கடலில் கலக்கின்ற இடத்தில் வருவதால், கடைமடை என்று சொல்லப்படுகிறது.

அந்தக் கடைமடையில் அமைந்திருப்பதுதான் என்னுடைய சீர்காழி தொகுதி. நாங்கள் பார்ப்பதெல்லாம் வயல், வரப்பு, ஆறு, குளம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், கடைமடைக்கு விளக்கம் கேட்கவில்லை. கேள்வி என்ன என்பதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரிடம் கேட்கவும்.*

திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். இதுபோன்று வெறும் விவசாய நிலங்களை மட்டுமே பெற்றிருக்கின்ற சீர்காழி தொகுதியில் எந்தத் தொழிற்பேட்டையும் கிடையாது. படித்தவர்கள், தொழில்முனைவோர் நிறைய பேர் வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள். இந்த நந்நாளில் என்னுடைய சீர்காழி தொகுதிக்கு ஒரு சிப்காட் தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்க மறுபரிசீலனை செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2. தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். எல்லா நலனும் பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறது இந்த அவை. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாழ்த்து தெரிவித்திருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, கடைமடைக்கும் கருணை காட்டுபவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவருடைய கருணைமிக்க பார்வையில் ஒரு சரியான தொழிற்பேட்டை அமையக்கூடிய, தொழில்மனைகளை உருவாக்கக்கூடிய நிலம்*